




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மது அடிமைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கம் கருங்கல், பெத்லகேம் பொறியியல் கல்லூரியில் இன்று (21.02.2017) நடைபெற்றது

செ.வெ.எண்: 132/2017 நாள்: 21.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மது அடிமைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று (21.02.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மது அடிமைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கத்தினை, கருங்கல், பெத்லகேம் பொறியியல் கல்லூரியில் இன்று (21.02.2017) நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று, தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி, ஐநூறு மதுபான கடைகள் ஏற்கெனவே மூடப்பட்டது. தற்போது, மீண்டும் ஐநூறு மதுபான கடைகள் மூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கையொப்பமிட்டார்கள். நமது மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மதுபானம் அருந்துவது கேடு என்பதை குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், ஏற்கெனவே பள்ளி மற்றும் கல்லூரி அளவில் பேரணிகள் நடத்தப்பட்டது. மதுபானம் அருந்துவதால், 96 நிமிடத்திற்கு ஒருவர் மரணம் அடைகிறார். குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், ஒருநாளைக்கு குறைந்தபட்சம் 15 நபர்கள் இதனால் மரணம் அடைகிறார்கள். மதுபானம் அருந்துவதால் உடலுக்கு கேடு விளைவிப்பது மட்டுமல்லாமல், ஆரோக்கியம் குறைந்து விடும். தொடர்ந்து மதுபானம் அருந்தி வருவதால் சமுதாயத்தில் சுயமரியாதை இழக்கும் சூழ்நிலை உருவாகிறது. குறிப்பாக, மனிதர்களின் முக்கிய உறுப்பான மூளையை பாதிக்க செய்கிறது. ஆகையால் தான், மனிதன் தான் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் போகிற நிலைக்கு ஆளாகிறார். அதுமட்டுமல்லாமல், இருதயம், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகள் பாதிப்புக்குள்ளாகிறது. மது அருந்தி வாகனம் ஓட்டும்போது, போக்குவரத்து விதிமுறைகளை மீறகூடிய செயல் ஒன்றாகும். மேலும், விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது.

தொடர்ந்து மதுபானம் அருந்தி வருவதால், அவர்களது குடும்பம் வறுமையில் பாதிப்பதோடு, அவர்களின் குழந்தைகளின் கல்வியும், எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது.

எனவே, மதுவினால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக அரசு மருத்துவர்களை அணுகி, தொடர்ந்து 3 அல்லது 4 மாதம் சிகிச்சை மேற்கொண்டு வந்தால், நிச்சயமாக அவர்களின் வாழ்வில் பெரிய மாற்றங்கள் மேற்கொள்ள முடியும்.

மேலும், கல்லூரி மாணவ, மாணவியர்களாகிய நீங்கள், உங்களது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர்களிடம் மதுவினால் ஏற்படும் தீமைகள் குறித்து, எடுத்துரைத்து விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில், உதவி ஆணையர் (ஆயம்) திரு. காளிமுத்து, கல்லூரி இயக்குநர் முனைவர் ஸ்டீபன் கிங்ஸ்லி, கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் தேவ் ஆர். நியூலின், உசூர் மேலாளர் திருமதி. வாசுகி, கோட்ட ஆய அலுவலர்கள் திருமதி. ஜெயா (பத்மநாபபுரம்), திரு. சுரேஷ்குமார் (நாகர்கோவில்), கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.